


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.7.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா மற்றும் நிர்வாகிகள் வி.பி. மணி, எஸ். வெங்கடேஷ், ஜி. சக்திவேல், எம்.கே.ஜி. ஆனந்த குமார், எஸ். வின்சன்ட், எம். ஆனந்த் ஆகியோர் சந்தித்து, 300 சதுர மீட்டருக்குள் கட்டட பரப்பளவு கொண்ட 14 மீட்டர் உயரத்திற்குள் உள்ள வணிகக் கட்டடங்களுக்கு கட்டட நிறைவுச் சான்றிதழ் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்து, கோரிக்கை மனு அளித்தனர். உடன் பொள்ளாச்சி தொழில் மற்றும் வர்த்தக சபையின் தலைவர் எஸ். வெங்கடேஷ் மற்றும் பொள்ளாச்சி வட்டார சிறு வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் ஜி. சக்திவேல் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.7.2024) தலைமைச் செயலகத்தில், திருச்சி – தமிழ் இவாஞ்சிலிக்கல் லுத்தேரியன் திருச்சபையின் (TELC) தலைவர் அருட்தந்தை கிரிஸ்டியன் சாம்ராஜ், செயலாளர் ஆர். தங்கபழம், நிர்வாகிகள் ஸ்டான்லி தேவகுமார், எஸ். ஞானப்பிரகாசம், குணாளன் பாக்கியராஜ், தாமஸ் கென்னடி, அடைக்கலசாமி, டி. அகஸ்டின், ஜெ.ஜி. ஜேக்கப் சுந்தர்சிங், சாம்சன் ஞானராஜ், ஜெ. பால் மோகன் ஆகியோர் சந்தித்து, தமிழ்நாட்டில் முதன் முதலில் அச்சு இயந்திரத்தை நிறுவி தமிழுக்குப் பெருமை சேர்த்த சீகன் பால்கு அவர்களுக்கு சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



கழகத் தலைவரும் – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களால் உருவாக்கி வளர்த்தெடுக்கப்பட்ட தி.மு.க. இளைஞர் அணி, 45ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்ததையொட்டி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.07.2024) அண்ணா அறிவாலயத்தில், கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.

### இன்று தொடங்குகிறது!

# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்!

புதுடெல்லி, ஜூலை 22–

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் இன்று ஜூலை 22ம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 12 வரை நடைபெற உள்ளது. முதல்நாளிலேயே பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்பட உள்ளது. அதனைத் தொடர்ந்து, ஜூலை 23ம் தேதி ஒன்றிய நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. மேலும், இக்கூட்டத் தொடரில் நிதி மசோதா, பேரிடர் மேலாண்மை மசோதா, கொதிகலன்கள் மசோதா உள்ளிட்ட 6 மசோதாக்களை தாக்கல் செய்ய ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்கிடையே, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா நாடாளுமன்ற கூட்டத்தொடரின் நிகழ்ச்சி நிரல்களை தீர்மானிக்கும் அலுவல் ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளார். இக்குழுவில் பா.ஜ.க.வைச் சேர்ந்த அனுராக் சிங் தாக்கூர், நிஷிகாந்த் துபே, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கே.சுரேஷ், கௌரவ் கோகோய் ஆகியோரும், தி.மு.க. சார்பில் தயாநிதி மாறன், திரிணாமுல் காங்கிரஸ் சார்பில் சுதீப் பந்தோபாத்யாய், சிவசேனா சார்பில் அரவிந்த் சாவந்த் உள்ளிட்டவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இந்நிலையில், நாடாளுமன்றக் கூட்டத் தொடரை சுமூகமாக நடத்துவது குறித்து விவாதிப்பதற்காக ஒன்றிய அரசு அழைப்பு விடுத்துள்ள அனைத்துக்கட்சிக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தலைமையில் இன்று காலை 11 மணிக்கு கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை தொடங்கும் நாடாளுமன்ற மழைக் கால கூட்டத் தொடரில், நீட் தேர்வு முறைகேடுகள், அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம், தொடர் ரயில் விபத்துக்கள் உள்ளிட்ட பிரச்சினைகளை இந்தியா கூட்டணிக் கட்சிகள் எழுப்ப உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

### ஐ.ஏ.எஸ்.அதிகாரிகள் நியமன சர்ச்சை வெடித்துள்ள நிலையில்

# யு.பி.எஸ்.சி.தலைவர் மனோஜ் சோனி திடீர் ராஜினாமா!

### பதவிக்காலம் முடிய மேலும் 5 ஆண்டுகள் உள்ள நிலையில் பதவி விலகல்!

புதுடெல்லி,ஜூலை 22-

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமனத்தில் சர்ச்சை வெடித்துள்ள நிலையில், யு.பி.எஸ்.சி.தலைவர் மனோஜ் சோனி திடீரென ராஜினாமா செய்துள்ளார்.

*2017 ஆம் ஆண்டு யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் உறுப்பினராகச் சேர்ந்த மனோஜ் சோனி, 2023 ஆம் ஆண்டு அதன் தலைவராகப் பொறுப்பேற்றார். இவரது பதவிக்காலத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமனத்தில் மோசடி புகார்கள் எழுந்தது கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியது. இந்த சர்ச்சை தொடரும் நிலையில் யு.பி.எஸ்.சி. தலைவர் பதவியிலிருந்து அவர் விலகியுள்ளார்.*

*கடந்த மாதமே தனது பதவி விலகல் கடிதத்தை குடியரசுத்தலைவருக்கு மனோஜ் சோனி அனுப்பிவிட்டதாகவும், ஒன்றிய அரசு பதவி விலகலை இன்னும் ஏற்கவில்லை என்றும் கூறப்படுகிறது. மனோஜ் சோனியின் பதவிக் காலம் முடிய மேலும் 5 ஆண்டுகள் உள்ள நிலையில், திடீரென ராஜினாமா செய்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*



மயிலாடுதுறை மாவட்டம்,சீர்காழியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் 530 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகட்டுவதற்கான ஆணையை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்.உடன் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சி தலைவர் ஏ .பி. மகாபாரதி, சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றிய குழு தலைவர்கள் கமல ஜோதி, தேவேந்திரன், ஜெயபிரகாஷ், சீர்காழி மேற்கொண்டிய செயலாளர் ஏ.ஜி.ஜெ.பிரபாகர், சீர்காழி நகர செயலாளர் ம.சுப்பராயன்,மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தியாக.விஜயேஸ்வரன் மற்றும் பலர் உள்ளனர்.



கோவை தெற்கு மாவட்டம் பொள்ளாச்சி அடுத்த அய்யம்பாளையம் ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் வடக்கு மேற்கு ஒன்றிய செயலாளர் ரமேஷ் ஏற்பாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி 45 வது ஆண்டு சிறப்பை கொண்டாடும் விதமாக நலத்திட்ட உதவி வழங்கி ஆதரவற்ற முதியோர்களுக்கு காலை அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் கலந்து கொண்டு ஆதரவற்ற முதியோருக்கும் உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வடக்கு மத்திய ஒன்றிய செயலாளர் ராசு, கோவை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சபரி கார்த்திகேயன், தலைமை செயற்குழு உறுப்பினர் அமுதபாரதி, மு.க.முத்து, தெற்கு மாவட்ட அவைதலைவர் சுப்பிரமணியம், மாவட்ட பொருளாளர் பிரகாஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் திருமலை ராஜா, மன்னூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ராசு, நல்லூத்துக்குளி ஊராட்சி மன்ற தலைவர் தர்மராஜ், பொள்ளாச்சி வடக்கு மேற்கு துணைச் செயலாளர் ராம்ராஜ், மாவட்ட பிரதிநிதி ராம பட்டணம் சபரி, மன்னூர் ஊராட்சி மன்ற தலைவர் வள்ளி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் இளைஞர் அணி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# கலையுள்ள காலமெலாம் கமழும் உன் நினைவுகள்!

விழுப்புரம் சின்னய்யா
கணேசனாய்
வெளிப்போந்து
பொழுதெலாம்
நாடகத்தில்
புரண்டெழுந்து
வளர்ந்ததனால்
செழிப்பான நடிப்பிலே
செம்பியன் ஆனநீ
எழுச்சிதரும் அண்ணாவின்
இந்துகண்ட இராச்சியத்தில்
விழித்தெழுந்த சிவாஜியாய்
வேடமிட்டு முழங்கினாய்;
அழுத்திவந்த ஆரியத்தின்
ஆணிவேர் நறுக்கிடும்
மொழிக்கனலை அண்ணா
மூட்டியதை அரிமாவாய்ப்
பொழிந்ததைக் கண்டுளம்
பூரித்த பெரியார்தான்
எழுகவே சிவாஜியாய்
இன்றுமுதல் உன்பெயர்
வழங்கட்டும் சிவாஜியென
வாழ்த்திய வாழ்த்தொரு
வழுவிலா
வரமன்றோ;
வாய்த்ததும் உனக்கன்றோ!

திரையுலகில் புதியதொரு
திருப்பத்தைத் தந்தபடம்;
புரையோடும்
சமுதாயப் புன்மைகளைத்
தகர்த்தபடம்;
இரையாகும் ஏழையர்
எழுச்சியுறச் செய்தபடம்;
அரைவயிற்றுக்
கஞ்சிக்கே
அல்லாடல் சொன்னபடம்;
இருளிலே மதம்கடவுள்
என்றிருந்தோர் ஒழித்தபடம்;
தெருவிலே திரிந்தோரைச்
சிந்திக்க வைத்தபடம்;
பருவத்துக் கைம்பெண்ணோ
படுந்துயரைப் பகர்ந்தபடம்!
கரைமீறும் உணர்ச்சிகளைக்
கலைஞர்தம் கைவண்ணம்
உரையாடல் ஆக்கிட
ஒளிக்கனலாய்த் தெரித்திடச்
சரியாகப் பேசியுன்
சரித்திர நடிப்பாலே
வரையற்ற புகழுற்று
வானத்தைத் தொட்டுவிட்டாய்!
ஒருபடத்தால் உயர்ந்துவிட்டாய்;
உலகெலாம் தெரிந்துவிட்டாய்!
திரும்பிப்பார் மனோகரா
திக்கெலாம் வளர்ந்துவிட்டாய்!

அரைகுறையாய்ப்
பாழ்பட்டே
அடியிலே கிடந்ததமிழ்த்
திரையிலே நின்றொளிரும்
தீச்சுடராய்த் தோன்றியே
விரைந்தெழ அன்றுமுதல்
வீசுகிற புயலாக
இரைந்தோடும்
அருவிஆறாய்
இமயமாய் இனிமையைத்
தருகின்ற தென்றலாய்த்
தமிழ்மணம் பொழிந்திருந்தாய்

கருவிலே நடிப்புடையாய்!
கம்பீர நடையுடையாய்;
உருவிலே அழகுடையாய்;
உரையிலே தெளிவுடையாய்;
பெரும்போதும் நடிப்பொன்றே
பிறந்தபயன் என்றிருப்பாய்;
ஒருபோதும் நேரந்தான்
தவறாத ஒழுங்குடையாய்;
கருமமே உயிரெனக்
காலமெலாம் உணர்ந்திருந்தாய்!
வரும்போதும் போம்போதும்
வாஞ்சையுடன்
உரைத்திருப்பாய்!

இரவிலே நிலவாகி
இருளோட்டும் கதிராகி
வருகின்றாய், எழுகின்றாய்
வளர்கின்றாய்;
வாழ்கின்றாய்!
தெருவிலே, வீட்டிலே
தெரியாத நாளுண்டா?
உருகியே உவந்துமே
ஒன்றியே பார்க்காஉன்
ஒருபடம் இங்குண்டா?
ஒளிராத பொழுதுண்டா?
திருவிடம் உனைப்போற்றத்
திகழுவாய் எந்நாளும்!
நிரந்தரம் உன்புகழ்;
நீள்வையம் கொண்டாடும்;
பரந்தெழும் என்றென்றும்;
பாராட்டிச் செண்டாடும்!
கலையுலகக் குரிசிலே,
கால்நூறு படங்களில்
தலைவனாய்
நடித்தவனே;
சரித்திரம் படைத்தவனே;
இலையுனக்கு ஈடாக
இங்கொருவர் என்கின்ற
நிலையினில்
நின்றவனே,
நெஞ்சங்கள் வென்றவனே,
அலைகளோ ஆழ்கடலில்
அகலாமல் எழுதல்போல்
தொலைவானில் விண்மீன்கள்
சுடராக ஒளிர்தல்போல்
மலைமேலே பனிக்குவியல்
மறையாமல் விளங்கல்போல்
இலைகளும் மரத்துடன்
எழிலாகத் துலங்கல்போல்
விலையிலா மாமணியே,
வெண்சுடர் ஒளிக்கதிரே,
பலநிலா சேர்ந்தொரு
பால்நிலா ஆனதுபோல்
விலகிடா வானிலே
விளங்கிடும் வெளிச்சமே,
மலரெலாம் சேர்ந்தொரு
மலர்த்தோட்டம்
ஆனதுபோல்
பலவண்ண வேடங்கள்
பார்வியக்கப்
பூண்டவனே!
நலமாக ஒவ்வொன்றும்
நாயகனாய் ஆண்டவனே!

உலகமே வியக்கின்ற
ஒப்பற்ற ஒருநடிகர்
திலகமே,எட்டாத
சிகரமே, நடிப்பினில்
அலகிலா விளையாட்டை
ஆடிய செம்மலே!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

இலக்கணமும் நீயேதான்,
இறவாமல் நிலைபெறும்
இலக்கியமும்
நீயேதான்,
இலகமுத சுரபியும் நீ,
இனிதூட்டும்
காவிரிநீ,
உலவிடும் தென்றலும்நீ,
ஓங்கிடும் புயலும்நீ!

நிலவிடும் உணர்ச்சிகள்
நின்முகம் மெய்யெலாம்
பலபட வெளிப்படும்,
பாத்திரத்திற்கு ஏற்றபடி
குலவிடும் குரல்வளம்;
குமுறிடும், கொஞ்சிடும்,
கலகல என்றெழும்,
கனிந்திடும், கண்ணீரைப்
பொலபொல எனச்சொரியும்,
பொங்கிடும் வெள்ளமாகும்!

விழியிலே இமையிலே
விரிந்த ஒரு நெற்றியிலே
மொழியிலே
இதழிலே
மூண்டெழும் குரலிலே
சுழியிலே விரலிலே
துடித்திடும் நரம்பிலே
கழுத்திலே கன்னத்தில்
கைகளில் கால்களில்
எழுத்தாக நடிப்பினை
இலக்கியமாய்த் தந்தவனே,
அழுத்தமாய்ப் பதித்தவனே,
ஆலமரம் ஆகிட
விழுதுகள் பற்பல
விளைந்தன உன்னிடம்!
தொழுதுன்றன் வழியிலே
தொடர்ந்தவர் பற்பலர்!
அழுதாலும் சிரித்தாலும
அரிமாவாய் முழங்கினாலும்
பொழுதெலாம் உனக்கிந்தப்
புவியிலே நிகரேது?
எழுதலாம் எவ்வளவோ,
எழுத்தடங்கா அவ்வளவும்!

திரையுலகில் உனைவெல்லத்
திக்கெட்டும் தேடினும்
உரைத்திட ஒருவரின்றி
ஒப்பற்றுத் திகழ்கின்றாய்!
நரைத்திடும் காலமுற்றும்
நாயகனாய் நடித்தவன்நீ!

கரையாத வைரமாம்
கரியாத சூரியனாம்
சரியாத நெடுமலையாம்
சலியாத அலைகடலாம்
வரையாத ஓவியமாம் வடிக்காத
சிற்பமாம்
அரையாத சந்தனமாம்
ஆக்காத பூக்காடாம்
மறையாத வானமாம்
(வற்றாத ஆறுமாம்
குறையாத நிலவுமாம்
குன்றாத ஒளியுமாம்!
நிறைவாக நீயென்றும்
நிலவிடும் இயற்கையாம்!

பெருமாளின் அருளாலே
பெருவாய்ப்புப்
பெற்றவனே!
ஒருநாளும் மறவாமல்
உள்ளத்தில் நன்றியுடன்
திருநாளில் சென்றவரின்
சீர்வாழ்த்து வேண்டினாய்,
திருப்பதிப் பெருமாளா?
திரைப்படப் பெருமாளாம்!
வருநாளில் கூட உன்
வழியினர் வணங்கவைத்த
அருமையைப் பண்பாக
அகத்திலே கொண்ட உன்
பெருமையை என்னென்று
பேசிடல் கூடுமோ!

வள்ளலாய்ப் பிறக்குநீ
வாரியே கொடுத்ததை
எள்ளளவும் சொல்லாமல்
இருட்டடிப்புச்
செய்துவிட்டாய்!
விள்ளுதல் இழிவென்றும்
விளம்பரம் தாழ்வென்றும்
உள்ளத்தால் சிறந்தவன்நீ;
உயர்குடியில்
பிறந்தவன்நீ!

அண்ணாவின் பேரன்பை
அளவின்றிப் பெற்றநீ
மண்ணாண்ட காமராசர்
மனத்திலே இருத்தினாய்;
கண்ணாகக் கலைஞரைக்
கருதினாய், கடைசிவரை
விண்ணுயர் நட்புடன்
விளங்கினாய், அவருனது
பண்பட்ட நடிப்புக்குப்
பரிசிலைத் தருவதுபோல்
வெண்கலச் சிலைவைத்தார்.
விழிநீரால் நனையவிட்டார்!
நடிப்பிலே விண்ணுயர்ந்தாய்
நயவஞ்ச அரசியல்
படிப்பிலே விழுந்துவிட்டாய்;
பழையதொரு படகிலே
துடுப்பினை ஏந்தினாய்;
சுழலிலே நீந்தினாய்;
தடுப்பின்றி ஆழ்ந்துவிட்டாய்;
தரைதட்டிச்
சாய்ந்துவிட்டாய்!
இடுக்கினால் ஓய்ந்துவிட்டாய்;
இரண்டகத்தால்
சோர்ந்துவிட்டாய்!
கொடுக்கிலே நஞ்சிருக்கக்
கொட்டுவோர் உடனிருந்து
நெடுகவே உனைத்தள்ள
நேரந்தான் பார்த்திருந்தார்;
கடுகளவும் நீஅவர்
கரவினை உணராமல்
படுபொத்தல் கலத்திலே
பலகுளமாய் நீரிறைத்தும்
கெடுதலே தேடினார்!
கேண்மையிலார்
ஓடினார்!

அடுக்கினால் உன்பெருமை
ஆகாயம் தொடும்போது
ஒடுக்கவும் முடியாது:
ஒருநாளும் உன்புகழைத்
தடுக்கவும் இயலாது!
தந்திரம் தெரியாத
கெடுக்கவும் அறியாத
கீழ்மையே புரியாத
கொடுக்கவே தெரிந்தநீ
கொள்ளவும் விழையாமல்
நெடுகவே நடந்துவிட்டாய்;
நீசரைக் கடந்துவிட்டாய்!
தொடுக வா என்றுவான்
தோள்தர என்றும்நீ
முடிதலே இல்லாத
முதல்வனாய் முகிழ்த்துவிட்டாய்!
தொடுதலே முடியாத
தொலைவானம் ஆகிவிட்டாய்;
விடுதலே இல்லை உன்
விதவிதமாம் நடிப்பினை!
நடுதலே நல்லெண்ணம்
நல்குமே படிப்பினை!

சிலையாகிப் போனாலும்
சிவாஜி என்கின்ற
மலையென்றும் நின்றிடும்;
வான்தொட்டு நிமிர்ந்திடும்;
திலகமாய் விளங்கிடும்;
செந்தமிழ் மணந்திடும்;
நிலையிலா உலகிலே
நிலையாகும் புனைவுகள்;
கலையுள்ள
காலமெலாம் கமழ்ந்திடும் நினைவுகள்!